# கோவில்பட்டி நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

நிகழும் விகாரி வருடம் சித்திரை திங்கள் 17, நாள். 30–04–2020ம் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை :–திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,**

கோவில்பட்டி நகராட்சி
நாள்: 30–04–2020

தனிஅலுவலர்
கோவில்பட்டி நகராட்சி

| மன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 30–04–2020 | **பொருள் எண்: 1**<br>கோவில்பட்டி நகராட்சி இளவேலங்கால் நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 150 HP இரண்டாம் எண் மின்மோட்டார் பழுதடைந்துள்ளதால் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் சராசரியாக வழங்கும் அளவைவிட குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டுள்ள SS HT Transformerல் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்இணைப்பு தடைபட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு இளவேலங்கால் நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார் மற்றும் Transformer ஐ பழுது நீக்கி சரிசெய்ய உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.7.40/–இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1913/2020/இ1 | தீர்மானம் எண்.4042 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **பொருள் எண்: 2**<br>கோவில்பட்டி நகராட்சி பார்க் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பூஸ்டர் நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார்களை இயக்குவதற்கு பொருத்தப்பட்டுள்ள பேனல் போர்டுகள் மற்றும் ஸ்டாட்டர்கள், பேனல் போர்டுகளில் இருந்து மின் மோட்டார்களுக்கு செல்லும் கேபிள்கள் மற்றும் MCCBயில் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்மோட்டார் இயக்க இயலாத நிலையில் உள்ளதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே, குடிநீர் விநியோகத்தினை கருத்தில் கொண்டு பார்க் பூஸ்டர் நிலையத்தில் பழுதடைந்துள்ள பேனல் போர்டுகள் மற்றும் ஸ்டாட்டர்கள், கேபிள்கள் மற்றும் MCCBக்களை மாற்றுவதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.7.40/– இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1913/2020/இ1 | தீர்மானம் எண்.4043 அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண்: 3</u>**<br>கோவில்பட்டி நகராட்சி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 220HP மூன்றாம் எண் மின்மோட்டார் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் சராசரியாக வழங்கும் அளவைவிட குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்ட SS HT Transformerல் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்இணைப்பு பாதிக்கப்பட்டு மின்மோட்டார்களின் பழுது ஏற்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார் மற்றும் SSHT Transformer-ஐ பழுது நீக்கி சீர்செய்ய உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.5.30/—இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1913/2020/இ1 | தீர்மானம் எண்.4044<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக்கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 4</u>**<br>இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் ஒரு வருவாய் அலுவலர் பணியிடம்—1, அலுவலக உதவியாளர் பணியிடம்—1ம் ஆகிய இரண்டு பணியிடங்களையும் வைத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் நகர்மன்றத்தின் அனுமதி பெற்று அதன்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு பணியிடங்கள் நீட்டித்து வைத்துக்கொள்ளப்பட்டு வந்தது.<br><br>மேற்படி இரண்டு பணியிடஙகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு.எண்.42480/2010/எப்1 நாள்.8.12.2010ம் தேதிய கடிதத்தில் 01.10.2000 முதல் 30.09.2009 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2009 முதல் 30.10.2010 வரை கால நீட்டிப்பு அனுமதி வழஙகியும், உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி இரண்டு பணியிடஙகளை 01.11.2010 முதல் 30.09.2019 வரை தொடர்ந்து நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி கோரியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3397/2004/சி1 | தீர்மானம் எண்.4045<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>பொருள் எண் : 5</u>**<br>கோவில்பட்டி நகராட்சியில் தினசரி சந்தைக்கு இரவு காவலர் பணியிடம்–1, தினசரி சந்தை வசூல் மஸ்தூர் பணியிடம்–1 ஆகிய இரண்டு பணியிடங்களுக்கு 01.10.2000 முதல் 30.09.2008 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2008 முதல் 30.09.2009 வரை கால நீடிப்பு செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு.எண். 28384/2008/ஜே3 நாள். 11.02.2010–ல் அனுமதியளித்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பணியிடங்களை 01.10.2009 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கு 29.09.2010–ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.1418 ன் தீர்மானம் மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.2639, நாள்: 27.03.2017ன் தீர்மானம் ஆகியவை அங்கீகரிக்கப்பட்டதின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கும் உரிய வழிமுறையாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி இரண்டு பணியிடங்களையும் 01.10.2009 முதல் 30.09.2019 வரை தொடர்ந்து நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், மற்றும் 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கும், அனுமதியளிக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7936/99/சி1 | தீர்மானம் எண்.4046<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 6</u>**<br>குழாய் ஆய்வாளர் பணியிடம்–1, குடிநீர் குழாய் பொருத்துனர் பணியிடம்–1, குழாய் திறப்பாளர் பணியிடம்–2 ஆக மொத்தம் நான்கு பணியிடங்களை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.16662/2009/எப்3, நாள்.22.07.2011ம் தேதியில் மேற்படி பணியிடங்கள் குடிநீர் பராமரிப்பு பணிக்கான நியமன நாள்28.03.2006 முதல் 30.09.2010 வரை வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்காணும் பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2019 வரை கால நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>கோவில்பட்டி நகராட்சி தற்போது அரசாணை எண்.237, நாள்.02.12.2008ன்படி சிறப்பு நிலையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. 40கி.மீ. தூரத்திலிருந்து சீவலப்பேரி கிராமத்திலிருந்து குழாய் மூலம் குடிநீர் இந்நகராட்சி எல்லைக்குள் கொண்டு வரப்பெற்று நகரிலுள்ள 7 மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு நகரிலுள்ள சுமார் 18524ற்கும் மேல் உள்ள குடிநீர் இணைப்புகள் மூலம் மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வினியோகம் செய்யும் பணிக்கு கீழ்கண்ட பணியிடங்கள் மிகவும் அவசியமாக உள்ளது.<br>1) குழாய் ஆய்வாளர் .. 1<br>2) குடிநீர் குழாய் பொருத்துனர் .. 1<br>3) குழாய் திறப்பாளர் – 2 | தீர்மானம் எண்.4047<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்படி புதிதாக ஒரு வருடகாலம் தோற்றுவித்து அனுமதித்த பணியிடங்களை நிரப்பும் தேதி 01.10.2011 முதல் 30.09.2019 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் மேற்படி பணியிடங்களை தொடர்ந்து நிரந்தரமாக வைத்துக்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கக்கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2349/2004/சி1 | |
| | **<u>பொருள் எண் : 7</u>**<br>கோவில்பட்டி நகராட்சியில் வருவாய் ஆய்வாளர் பணியிடம்–1, வருவாய் உதவியாளர் பணியிடம்–2 ஆகிய மூன்று பணியிடங்களை 01.10.1999 முதல் 30.09.2000 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை மூ.மு.எண்.40129/2000/எச்1, நாள்.22.07.2000ன்படி அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்நகராட்சியில் வருவாய் ஆய்வாளர் பணியிடம்–1, வருவாய் உதவியாளர் பணியிடம்–2 01.10.2000 முதல் 30.09.2016 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் 01.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கேட்டுக்கொண்டு நகர்மன்றத் தீர்மான எண்.2635 நாள்.27.03.2017–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்படி பிரேரணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் உரிய வழிமுறையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி மூன்று பணியிடஙகளையும் 01.10.2000 முதல் 30.09.2019 வரை வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதிக்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7941/99/சி1 | தீர்மானம் எண்.4048<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக்கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 8</u>**<br>இந்நகராட்சியில் பொறியாளர் நிலை 2–ன் பணியிடத்தை 01.10.2010 முதல் 30.09.2011வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி அளித்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16662/09/எப்3 நாள். 22.07.2011ன்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி பணியிடத்தை 01.10.2011 முதல் 30.09.2019 வரை தொடர்ந்து நீட்டித்து வைத்தமைக்கு பின்னேற்பும் 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கக்கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br><br>கோவில்பட்டி நகராட்சி அரசு ஆணை எண்.237, நாள்.02.12.2008–ன்படி சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது தமிழக அரசால் பல்வேறு வகையான திட்டப் பணிகளை பொதுமக்களுக்கு நல்லமுறையில் செய்து தருவதற்கு மான்யஙகளும், கடன்களும் வழங்கப்பட்டு வருகிறது. | தீர்மானம் எண்.4049<br>அலுவலக குறிப்பு:<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேலும் நகராட்சியில் 50 கி.மீ. தூரத்திலிருந்து சீவலப்பேரி கிராமத்திலிருந்து குழாய் மூலம் குடிநீர் கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குள் கொண்டு வரப்பட்டு நகரிலுள்ள 7 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு நகரில் 18524க்கும் மேல் உள்ள குடிநீர் இணைப்புகள் மூலம் குடிநீரும் மற்றும் நகரில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள், அடிபம்புகள் மூலம் குடிநீர் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி விநியோகம் செய்யும் பணிக்கு மேற்படி பொறியாளர் நிலை–2 பணியிடம் மிகவும் அத்தியாவசிய பணியிடமாக தேவைப்படுகிறது.<br>எனவே மேற்படி பணியிடத்தை 01.10.2011 முதல் 30.09.2019 வரை தொடர்ந்து நீட்டித்து வைத்தமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7940/99/சி1 | |
| | **<u>பொருள் எண் : 9</u>**<br>இந்நகராட்சியில் இளநிலை உதவியாளர்கள் பணியிடம்–3 பணியிடங்களுக்கு 01.10.1998 முதல் 30.09.1999 முடிய நீட்டித்து வைத்தமைக்கு பின்னேற்பும், 01.10.1999 முதல் 30.09.2000 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.எண்.40129/2000/எச்1, நாள்.22.07.2000ல் அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 01.10.2000 முதல் 30.09.2009 வரை வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2000 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கும் அனுமதிக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கேட்டுக்கொண்டு நகர்மன்ற தீர்மான எண்.1021 நாள். 28.08.2009ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 7938/99/சி1 நாள்: 03.02.2010ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உரிய வழிமுறையாக அதன்படி பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி மூன்று இளநிலை உதவியாளர் பணியிடஙகளை 01.10.2000 முதல் 30.09.2019வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள அனுமதியளிக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7938/99/சி1 | தீர்மானம் எண்.4050<br>அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |
| | **<u>பொருள் எண் : 10</u>**<br>கோவில்பட்டி நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒரு இளநிலை பொறியாளர் பணியிடம்–1, மீட்டர் ரீடர் பணியிடம்–1 குழாய் சுத்திகரிப்பாளர் பணியிடம்–2, இழுவை வண்டி ஓட்டுனர் பணியிடம்–1, வரைவாளர் பணியிடம்–1, மஸ்தூர் பணியிடம்–6 ஆகிய மொத்தம் 12 பணியிடங்களை 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.16662/2009/எப்3 நாள்:22.07.2011ல் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நகராட்சியில் கீழே குறிப்பிட்டுள்ள 12 பொறியாளர் பிரிவு பணியிடஙகளை 01.10.2011 முதல் 30.09.2019 வரை நீட்டித்து வைத்தமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண்.4051<br>அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 1) | இளநிலை பொறியாளர் பணியிடம் | 1 |
| 2) | மீட்டர் ரீடர் பணியிடம் | 1 |
| 3) | குழாய் சுத்திகரிப்பாளர் பணியிடம் | 2 |
| 4) | இழுவை வண்டி ஓட்டுனர் பணியிடம் | 1 |
| 5) | வரைவாளர் பணியிடம் | 1 |
| 6) | மஸ்தூர் பணியிடம் | 6 |
| | **மொத்தம்** | **12** |

**அலுவலக குறிப்பு :-**

மேற்குறிப்பிட்ட பணியிடஙகளில் வரிசை எண்.1 முதல் 5வரை உள்ள மொத்தம் 6 பணியிடங்களும் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக நகராட்சியில் இருந்து வருகிறது. மேற்படி பணியிடங்கள் குடிநீர் விநியோக பணிகளை கவனிப்பதற்கு மிகவும் அத்தியாவசியமான பணியிடங்களாக உள்ளது. மேலும் வளர்ந்து வரும் இந்நகராட்சிக்கு இப்பணியிடஙகளினால் நகரில் குடிநீர் விநியோகம் தொடர்ந்து தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் வரிசை எண்.6—ல் குறிப்பிட்ட 6 மஸ்தூர் பணியிடங்களும் நகரிலுள்ள மொத்தம் 237 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 65 பொதுகுடிநீர் குழாய்கள் மேற்படி பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரிலுள்ள குடிநீர் குழாய்கள், பீடர் லைன், பம்பு மெயினில் ஏற்படும் பழுதுகள் ஆகியவைகளை மேற்குறிப்பிட்ட பணியாளர்களை கொண்டு சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகரிலுள்ள சுமார் 18524 குடிநீர் குழாய் இணைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள அளவுமானி மூலம் அளவுகள் எடுக்கப்பட்டு குடிநீர் கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு மீட்டர் ரீடர் பணியிடம் மூலம் செய்யப்பட்டு வருகிறது. நகரிலுள்ள குடிநீர் விநியோக வால்வுகளையும் மேற்படி பணியாளர்களைக் கொண்டே பராமரிக்கப்பட்டு வருகிறது.

எனவே மேற்கண்ட 12 பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2019 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2019 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம். .

ந.க.எண். 5387/2000/சி1

**பொருள் எண் : 11**

இந்நகராட்சிக்கு தேவையான எழுதுபொருட்கள், கணினி டோனர்கள் மற்றும் இதர பொருட்களை சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், தூத்துக்குடி நிறுவனத்தின் 16.08.2019 அன்று கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண்:3721 நாள்.30.08.2019—ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்தில் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன் அச்சிட்டு வாங்க ஏதுவாக இனி விலைப்புள்ளி கோரி அதனால் ஏற்படும் காலதாமதத்தையும், கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் விதமாகவும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன் வில்லைகளை சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர் தொழில் கூட்டுறவு சேவை சங்கம் தூத்துக்குடி நிறுவனம் மூலம் பழைய விலைப்புள்ளி அடிப்படையிலேயே அச்சிட்டு வாங்கிய வகையில் பட்டியல் எண். 14, நாள்: 30.04.2020—ன்படி பட்டியல் தொகை ரூ.1,22,318/—யை மேற்படி கூட்டுறவு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4576/2019/பி2

தீர்மானம் எண்.4052
அலுவலக குறிப்பு: அங்கீகரிக் கப்பட்டது